## வெலிக்கந்த பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிக்கந்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வெலிக்கந்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வினியோகிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i) ஈ (iii) உப பரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i) ஈ (iv) பரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு கொள்கை நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அருகிச் செல்லும் மீதி முறைமையில் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது எதிர்காலத்தில் கணக்கீட்டு கொள்கையின் கீழ் குறிப்பிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு முறைமை மற்றும் பெறுமானத் தேய்வு விகிதம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக ரீதியில் காணப்படாத 03 கட்டிட விடயங்களின் தேறிய பெறுமதி ரூபா 665,076 தொகையை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படாமையினால் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கட்டிடங்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 155,470 பெறுமதியான 04 சொத்து விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பெறுமதியை புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வு பெறுமதி என்பன சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | LDSP செயற்திட்டத்திற்காக மூலதன மானியமாக கிடைத்த தொகையில் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,334,906 தொகையான மூலதன செலவினங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண நடவடிக்கைககள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையினால் எதிர்காலத்தில் இந்த சொத்துக்களை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்படும். | மூலதன மானியங்களில் இருந்து செலவிடப்பட்ட செலவினங்கள் மீண்டெழும் செலவினமாக கருதாமல் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 3,460,000 தொகை உரிமை மூலதன மாற்றக் கூற்றில் மிகையில்/ பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது உரிமை மூலதன மாற்றல் கூற்றில் மீளாய்வாண்டின் விரிவான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மிகையில்/ பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மூலதன மானியம் ஆண்டின் போது கிடைத்த மூலதன மானியமாக இனங்காணப்பட்டிருந்தது டன், அது ஆண்டிற்குரியதாக இருந்தமையினால் விரிவான வருமானத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றல் கூற்றில் மூலதன மானியத்தின் மிகை அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமல் மூலதன மானியத்தின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பெறுமதி ரூபா 24,605,356 ஆக இருக்க வேண்டிய போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 38,965,922 ஆக ரூபா 14,360,566 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான காசு மீதிகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 882,185 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,123,800 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>மீளாய்வாண்டிற்காக 04 அறிவித்தல் பதாதைகளுக்காக அறிவித்தல் பதாதைகளில் உள்ளபடியான சதுர அடி அளவிற்கான கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன், அதன் நிலுவை ரூபா 166,250 ஆகும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறிவித்தல் பதாதைகளை மெய்மெய்யாய்வு செய்து அவற்றின் உள்ளபடியான சதுர அடி அளவிற்கு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை**<br>மதிப்பீட்டு திணைக்களத்தின் மாதாந்த வாடகை மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகைப் பணம் அறவிடப்படாமையின் காரணமாக செவனபிடிய இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத்தின் 16 கடைகளுக்குரியதாக மீளாய்வாண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் சபைக்கு ரூபா 455,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மாதாந்த வாடகைப் பணம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையின் காரணமாக மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக கோரப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை காணப்படுகின்ற செவனபிட்டியவில் 12 கடைகளில் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் வருடாந்தம் உருவாகின்ற 312 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் அளவு 2020 ஆம் ஆண்டில் ரூபா 5,000,181 செலவில் சபைக்குச் சொந்தமான எத்துலகலவில் அமைந்துள்ள கழிவு அகற்றும் நிலத்தில் அகற்றப்பட்டிருந்த போதிலும், உக்கும் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கக முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கழிவுப் பொருள் போக்குவரத்திற்காக தேவையான கம்பெக்டர் வண்டி எங்களுக்கு சொந்தமாக காணப்படவில்லை. 2020 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உக்காத கழிவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது அமுல்படுத்தப்படுமாயின் இந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். | முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். |